11th November 1965]

(இ) ஆம் எனில், பதினோராம் வகுப்பிற்கு நடத்தப்படும் அரசினர் பொதுத் தேர்விலும் இம்முறை கையாளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Principles governing promotions up to Standard X are laid down by Headmasters of schools in consultation with the Staff Council for each standard.

(இ) The marks obtained in the S.S.L.C. Public Examination alone are taken into consideration.

போதனு மொழி

*447 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எல்லாக் கலைக் கல்லூரிகளிலும் தமிழைப் போதனு மொழியாக்கும் திட்டம் ஏதேனும் இம் மாநில அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. There is no such proposal at present.

(b) Does not arise.

கல்லூரிகள்

*448 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடந்தை அரசினர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் ஆரம்பிக்கும்படி கோரிய தீர்மானம் ஏதேனும் குடந்தை நகராட்சியிடமிருந்து சர்க்காருக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The University of Madras is the authority to grant affiliation to Colleges to start post-graduate courses. The University is not in favour of granting affiliation to the Government College for Men, Kumbakonam, to start post-graduate courses. The Commissioner, Kumbakonam Municipal Council, was informed accordingly.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 5, 6 கல்லூரிகளிருந்தும் போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸஸ் அமைக்க வாய்ப்பு ஏற்படவில்லை. ஆகவே, கும்பகோணம் அரசினர் கல்லூரியில் போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸஸை விரிவான வகையிலே அமைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

[11th November 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டட வசதி, மற்ற வசதிகள் இருந்தால்தான் பல்கலைக்கழகம் அனுமதி கொடுப்பார்கள். இதற்கு வேண்டிய கட்டட விஸ்தரிப்பு வேலையிலே கவனம் செலுத்திவிட்டால், மேலும் போஸ்ட்-கிராஜுவேட் கோர்சுக்கு நாம் அங்கீகாரம் பெற முடியும்.

* 449 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியில் காப்பாளர் (Warden) யாரேனும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களா ?

(இ) இல்லை எனில் நியமிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The Principal, Presidency College is the ex-officio Warden of the Woman Students' Hostel of the Presidency College.

(b) Does not arise.

* 450 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற P.U.C., S.S.L.C. பரீட்சைகளில் தேர்வு பெற்ற மாணவர்களின் சதவிகிதம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : P.U.C. 45.1 per cent.

S.S.L.C. 56 per cent.

வீடு கட்டும் திட்டங்கள்

* 451 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :
திரு. வை. சங்கரன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடு கட்டும் திட்டங்களுக்காக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் மத்திய அரசினரிடமிருந்து நமது மாநில அரசு பெற்ற தொகை எவ்வளவு ?

(இ) அதில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு செலவழிக்கப் பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Central assistance received by this Government from the Government of India from the beginning of the First Five-Year Plan till the end of the fourth year of the Third Five-Year Plan is Rs. 958.35 lakhs from Central Government funds and Rs. 358.17 lakhs from Life Insurance Corporation Funds.